14.

அ ஆ அணில் ஆடு
அழகாய் இதனை நீ பாடு
இ ஈ இலை ஈட்டி
எழிவாய் நட நீ கை நீட்டி.
உ ஊ உரல் ஊசி.
உள்ளம் மகிழ நீ வாசி.
எ ஏ எலி ஏணி
ஏற்றம் இறைக்கும் நீர்க் கேணி
ஒ ஓ ஒட்டகம் ஓர் ஓடம்
உண்மை உரைப்பது நற்பாடம்
ஐ ஔ ஐயர் ஔடதமாம்
அன்பாய் தமிழ்யை படிப்போம் நாம்

15.

தேவே உன்னைப் போற்றிடுவேன்
(ரு) தினமும் என்னைக் காத்திடுவாய்
நாவால் உன்னை நான் பாட
நல்ல தமிழைத் தந்திடுவாய்

RangaRakes tamilnavarasam.com

16

வெள்ளி நிலா வா வா
விளையாட நீ வா வா
நல்லப் பாட்டுப்பாடுவோம்
நாமும் ஓடி யாடுவோம்
ஒன்று இரண்டு மூன்று
ஓடி வா இன்று
நல்லப் பாட்டுப்பாடுவோம்
நாமும் ஓடி யாடுவோம்
நான்கு ஐந்து ஆறு
நின்றுய் எண்ணிப் பாரு
ஏழு எட்டு ஒன்பது
ஏன் அங்கே நிற்பது
பத்து நூறு ஆயிரம்
பறந்து வா சீக்கிரம்

17

கக்கதங்கி கக்கங்கி கட்டும்பிள்ளை
கயிறும் சோறும் தின்னும்பிள்ளை
ஆப்பம் சாட்டு தின்னும்பிள்ளை
அவலு இடிச்சி தின்னும்பிள்ளை



18

1+1=2, ஐஸ்பான் காரன் கிண்டு
2+1=3, அய்யாவீட்டு தாண்
3+1=4, கருப்பு நாயின் வாலு
4+1=5, பாட்டி தலை பஞ்சு
5+1=6, ரோட்டில் இருக்கும் தாரு
6+1=7, அம்மா போடும் கூழு
7+1=8, பாட்டி சுட்ட புட்டு
8+1=9, பாட்டி வெற்றிலை தின்பது
9+1=10, முதுகில் ஒரு குத்து

19 கூட்டல் கணக்கு பாட்டு
ஒன்று ஒன்றும் இரண்டு
பூவில் இருப்பது வண்டு
இரண்டும் இரண்டும் நாலு
எலியின் பின்னே வாலு
மூன்றும் மூன்று ஆறு
வேலை செய்தால் சோறு
நான்கும் நான்கும் எட்டு
நன்றய் இருக்கும் பிட்டு
ஐந்தும் ஐந்தும் பத்து
அண்ணன் பெயர் முத்து.

RangaRakes tamilnavarasam.com

20 முத்தம் தா

கண்ணே மணியே முத்தம் தா
கட்டிக் கரும்பே முத்தம் தா
வண்ணக் கிளியே முத்தம் தா
வாசக் கொழுந்தே முத்தம் தா
தேனே பாலே முத்தம் தா
தெவிட்டாக் கனியே முத்தம் தா
மானே மயிலே முத்தம் தா
மடியில் வந்து முத்தம் தா

21. கிழமைப் பாட்டு

ஞாயிற்றுக் கிழமையைக் காணோம்
திங்கள் கிழமை திருடன் கிடைத்தான்
செவ்வாய்க் கிழமை ஜெயிலுக்குப் போனான்
புதன் கிழமை புத்தி வந்தது
வியாழக் கிழமை விடுதலை யானான்
வெள்ளிக் கிழமை வீட்டுக்குப் போனான்
சனிக் கிழமை சாப்பிட்டுப் படுத்தான்
அப்புறம் அவன் கதை ஆருக்குத் தெரியும்.



22

1 வாத்து நல்ல வாத்து தான்
வாலை ஆட்டும் வாத்து தான்
2. அரக்கி நடக்கும் வாத்து தான்
அழகு வெள்ளை வாத்து தான்
3. குள்ள குள்ள வாத்து தான்
க்வாக் க்வாக் வாத்து தான்
4. மொட்டை மூக்கு வாத்து தான்
முட்டை போடும் வாத்து தான்
5, எனக்கு முட்டை வேணுமா
உடனே வந்து வாங்கிக் கோ
6, தின்ன முட்டை வாங்கிக் கோ
தேர்வில் முட்டை வாங்காதே

23 பாட்டுக்குப் போட்டி
வேட்டைக்கு ஈட்டி
கட்டிக்க வேட்டி
கதை சொல்லு பாட்டி

24. தாகம் தாகம் என்று சுற்றி
காகம் ஒன்று பறந்ததாம்
தண்ணீர் எங்கும் கிட்டாமல்
காவி காவி பறந்ததாம்
கூரை வீட்டு தோட்டப் புறம்
குடம் ஒன்று கண்டதாம்
கொள்ளா இன்பம் பொங்கவே
குதித்து அதைப் பார்த்ததாம்
நீர் அடியில் இருந்ததால்
காகமும் ஏமாந்தது
நீண்ட பெருமூச்சு விட்டு
சிந்தனையும் செய்ததாம்
சிந்தனையின் ஆற்றலாம்
வந்த தொரு யோசனை
சின்ன சின்ன கற்களை
பொறுக்கி குடத்துள் போட்டது
வந்தது தண்ணீர் மேலே
தாகம் தீர குடித்தது
வாய்விட்டு காகா வென்று
வட்டமிட்டுப் பறந்தது

25. தந்தம் தந்தம் தந்தம் தனதினனே
தந்திரக் குரங்கின் மோசம் பார்
புத்திக்கெட்ட பூனை இரண்டு
புதுமையான பலகாரம்
பற்றிக்கொண்டு குரங்கினிடம்
பங்கிட கொடுத்து பார் கொடுமை
துண்டு இரண்டு செய்தது தான்
தூக்கி விட்டது தராசு தனை
ஒன்றுக் கொன்று தாழ்த்திடவே
ஒன்றில் கொஞ்சம் தின்றிடவே
அப்படியே பலகாரமெல்லாம்
அதுவே தின்றது அநியாயம்
ஆகையினாலே பாலர்களே
பாகம் செய்ய அழையாதீர்கள்

RangaRakes tamilnavarasam.com

26

மனம்

எலியும் தவளையும் வெகுஇஷ்டமாய்
கலந்து வாலும் கையும் கயிற்றால்
கட்டிக் கொண்ட பின்
அவை களித்து திரிகையில்
கிட்ட இருந்த குளத்தில் தவளை
பாய்ந்து குதித்திட
திக்கு முக்கிட்டு எலி செத்து மிதந்தது
பக்கம் இருந்த பருந்து ஒன்று
பாய்ந்தாம் எலியை
தூக்கிச் செல்கையில் தவளை
தொங்கும் தவளையும்
போக்கில்லாமல் பருந்தினாலே
புசிக்கப்பட்டது யாரும் இதனாலே
மிக எளிதில் உணரலாம்
சேர ஒண்ணாதவர்தி சேர்க்கைதம்
செய்யும் தீங்கென்றே



27

ஒருநாள் பெருமழை பெய்த போது
குளிரால் வருந்திய குரங்கு ஒன்று
ஓங்கி வளர்ந்த மரத்தடியில்
தங்கியிருந்த தருணத்திலே
மரத்தின் மீது கூடு கட்டி
மகிழ்வாய் வாழும் குருவி ஒன்று
குரங்காரே குரங்காரே
குடியிருக்க இடமில்லையோ
மனிதனைப் போல உனக்கு இரண்டு
கைகளிருந்தும் பயன் என்ன?
கைகளில்லாத நாங்கள் கூடு
கருத்தாய் கூடுகள் கட்டுகிறோம்
என்று சொல்லி முடிக்குமுன்னே
உடனே குரங்கு கோபம் கொண்டு
வாயாடி அற்பப் பறவையே என்று
சொல்லிக் கொண்டே மரத்தில் குருவி
கட்டிய கூட்டை பிய்த்திட்டது
மூர்க்கர்க்கு நல் யோசனைகள்
சொன்னாலும் அது கேளாது.

RangaRakes

tamilnavarasam.com

28 காட்டில் ஒரு சிங்கம் தூங்கிடவே
காலை மேல் எலி ஓடிடவே
விழித்துக் கொண்டதைச் சிங்கம் பிடித்திடவே
வீர் வீர் என்று எலி கத்திடவே
தூக்கத்தை நீ கெடுத்தாய் என்று
துரிதமாய் சிங்கம் கேட்டிடவே
இந்தத் தவறைப் பொறுத்திடும் ஐயாவே
கும்பிட்டேன் காலில் என்றதுவே
சிங்கம் அதன் பின் யோசித்து
சிறுவனே மன்னித்தேன் என்று சொல்லி
தப்பினேன் பிழைத்தோம் என்று ஓடி
தங்கினது எலியும் தன் வளைக்குள்ளே.
வேடன் ஒருநாள் வலைவீசி வேகமாய்
அதில் சிங்கம் விழுந்து பட
சப்தம் செவிதனை எலி கேட்டு
சீக்கிரம் இடம் வந்து
விரைவில் வலையைக் கடித்தெறிந்து
வெளியே சிங்கத்தை போகவிட்டது.
உருவில் சிறியவர் இடத்திலுமே
உபகாரம் நன்றியுணர்ச்சி கொள்ளவேண்டுமென்றே
உணர்ந்து கொண்டோம் நாம் எல்லோரும்
உண்மையை இந்த கதையிலே

29. ஆமையும் முயலும் அழகாக
அவைகள் பந்தயம் ஆரம்பிக்க
ஆமை மெதுவாய் அசைந்திடவே
முயலும் முன்னே ஓடி ஒரு
வயலில் படுத்துத் தூங்கிடவே
வந்தது மெதுவாய் ஆமையுமே
முயலைப் பார்த்து மெதுவாக
முடிவில் ஆமை போயிற்று
முயலும் தூங்கி விழித்தவுடன்
மெல்ல மெல்ல போயிற்று
முன்னே ஆமையைப் பார்த்தவுடன்
முயலும் வெட்கம் அடைந்ததுவே
~~கர்வம் கொண்டால் தோற்றிடுவோம்~~
கர்வம் கொண்டால் தோற்றிடுவோம்
சாந்தம் கொண்டால் வென்றிடுவோம்

30. கட்டைவிரல் நானே ராஜா
காசு சுண்டி பார்ப்போன்
கடிதம் பிடித்து எழுதிடவும்
கருத்தாய்ப் பேனா பிடிப்பேனே

2, இரண்டாம் விரல் நானே ராஜா
எதுவும் சுட்டிக் காட்டி
எழுதவும் என் உதவியின்றி யாதுவும் நடவாது.
3, மூன்றாம் விரல் நானே ராஜா
மூன்றிருக்கில் பாரும்
மூத்தவனும் நானே நடு
நாயகனும் நானாம்
4, நான்காம் விரல் நானே ராஜா
நலமுடனே பாரும்
நவரத்தின மோதிரங்கள்
அணிபவனும் நானே
5, ஐந்தாம் விரல் நானே ராஜா
அதனை எண்ணிப் பாரும்
இரு கை பகவானைத் தொழுவதற்கு
முன் நிற்பவனும் நானே.



31. என்ன செய்யலாம்.
எருத்து மாட்டுத் தோலில்
செய்யலாமே செருப்புகள்
செத்த ஆட்டு மயிரில்
செய்யலாமே கம்பளி
செத்த எருமைக் கொம்பில்
செய்யலாமே சீப்புகள்
செத்த யானைத் தந்தத்தால்
செய்யலாமே பொம்மைகள்
செத்த பாம்புத் தோலிலும்
செய்யலாமே பைகள்
செத்த மனிதன் உடலிலே
செய்ய என்ன உள்ளதே
செருப்புக் கட்டித் தைத்திட
இன்று வேறும் இல்லையே.

1, வாத்தியார் வீட்டுக் கோழி
2, வாக்காளருக்குப் பெட்டிச்சாம்
3, கிட்டி மீன் கண்டசாம்
4, குதித்துக் குதித்துப் பார்த்தோம்.

32.

1. பட்டணத்துக்குப் போகலாம்
பட்டுடைகள் வாங்கலாம்
இடுப்பிலே கட்டலாம் ஜில் ஜில் நடக்கலாம்

2. மதுரைக்குப் போகலாம் மல்லிகைப்
பூவு வாங்கலாம் பின்னலிலே வைக்கலாம்
ஜோர் ஜோர் நடக்கலாம்

3. தஞ்சாவூர் போகலாம் - தந்தச் சீப்பு
வாங்கலாம் தலையை நன்றாய் வாரலாம்
ஜாம் ஜாம் நடக்கலாம்

4. மயிலாப்பூருக்கு போகலாம்
மல்லிகைப்பூ வாங்கலாம்
மாலையாகக் கட்டலாம்
மகிழ்ந்து தலையில் சூடலாம்.

5. திண்டுக்கல் போகலாம் - திருகுச் செம்பு
வாங்கலாம் தண்ணீர் நன்றாய் குடிக்கலாம்
டக் டக் நடக்கலாம்

6. பெங்களூருக்குப் போகலாம் தங்கவளையல்
வாங்கலாம் கைகளிலே போடலாம்
அணிக்கி குலுக்கி குலுக்கி



33. நரியும் திராட்சையும்

பெரிய தோட்டம் ஒன்றிலே
சிறிய நரியும் சென்றது.
நரிக்கு பசியும் வந்தது
நான்கு திசையும் சென்றது
உயர்ந்து வளர்ந்த கொடியிலே
உள்ள திராட்சை குலையிலே
நரியும் கண்டு மகிழ்ந்தது
நாக்கில் நீரும் சுரந்தது.
பறிக்க எட்டிப் பார்த்தது
பயன் படாமல் போயிற்று
முயன்று முயன்று பார்த்தது
முயற்சி வீணாய்ப் போயிற்று
வெறுப்பு அடைந்து வெறுத்து நரியும்
சொன்னதே சீச்சீ பழம் சுவையே
இல்லை இப்பழம் புளிக்குமே
என்று நரியும் நினைக்கையில்
எரிச்சலுடன் அவ்விடத்தை விட்டு

34/

கொழு கொழு கன்றே
கன்றின் தாயே
கன்று மேய்க்கும் ஆயனே
ஆயன் கைக் கோலே
கோல் வளர்த்த கொடி மரமே
கொடி மரத்தின் மேல் இருக்கும் கொக்கே
கொக்கு நீராடும் குளமே
குளத்தில் இருக்கும் மீனே
மீன் பிடிக்கும் வலையா
வலையன் கைக் கூடையே
கூடையும் செய்யும் குயவா
ணை குயவன் வனைக்கும் மண்ணே
மண் மேல் இருக்கும் புல்லே
புல்லே உன்னிடம் கிணாலே
என் பெயர் என்ன
" " "



35/ 10 பத்து சிட்டுக்குருவி கோட்டை மேலே பார்
அதில் ஒன்று பறந்திட மீதி ஒன்பது தான்
9 ஒன்பது சிட்டுக்குருவி கோட்டை மேலே பார்
அதில் ஒன்று பறந்திட மீதி எட்டு தான்
8. எட்டு சிட்டுக்குருவி கோட்டை மேலே பார்
அதில் ஒன்று பறந்திட மீதி ஏழு தான்.
7. ஏழு சிட்டுக்குருவி கோட்டை மேலே பார்
அதில் ஒன்று பறந்திட மீதி ஆறு தான்
6 ஆறு சிட்டுக்குருவி கோட்டை மேலே பார்
அதில் ஒன்று பறந்திட மீதி ஐந்து தான்
5 ஐந்து சிட்டுக்குருவி கோட்டை மேலே பார்
அதில் ஒன்று பறந்திட மீதி நான்கு தான்
4 நான்கு சிட்டுக்குருவி கோட்டை மேலே பார்
அதில் ஒன்று பறந்திட மீதி மூன்று தான்
3 மூன்று சிட்டுக்குருவி கோட்டை மேலே பார்
அதில் ஒன்று பறந்திட மீதி இரண்டு தான்.
2 இரண்டு சிட்டுக்குருவி கோட்டை மேலே பார்
அதில் ஒன்று பறந்திட மீதி ஒன்று தான்
1. ஒன்று சிட்டுக்குருவி கோட்டை மேலே பார்
அதில் ஒன்று பறந்திட மீதி சைபர் தான்

RangaRakes tamilnavarasam.com

36.

அம்மா பொன்னே தும்பைப்பூவே
ஆம்படையான் வந்தால் என்ன செய்வாய்
கட்டி வெல்லம் பிட்டு வைப்பேன்
கறந்த பாலு காய்ச்சி வைப்பேன்
பாலும் சோறும் போட்டு வைப்பேன்
உண்ண உண்ண சோறு வைப்பேன்
பட்டுப்பாயை விரிச்சிடுவேன்
பக்கத்தில் இருந்து பேசிடுவேன்.

37.

பாலக்காரச் சிறுவர் ஆடையாம்
மக்கள் உடுப்பது ஆடையாம்
பருத்தி இருந்தால் கொடையாம்
நாட்டியம் ஆடுவது மேடையாம்
இறைவன் முடியது சடையாம்
படை சின்னம் அடிக்கவது முரசு
மன்னன் ஆள்வது அரசு
விளையாட்டில் மே தனிசு
சு மேலோர் பெறுவது பரிசு.



38.

சூரியன் உதிப்பது காலை
நீ, சீதாக்கு வைப்பது காது
சூரியன் மறைவது மாலை
நீ சாமிக்கு அணிவது மாலை
எலிகள் தோண்டியது வளை
நீ அணி இடுப்பு வளை
நம்ம வீட்டு ஆடு
நாமும் போட்டு ஆடு
பானை உடைந்தால் ஓடு
நீ பள்ளியில் சேர ஓடு

39.

நோட்டு மேலே காரு
காருக்குள்ளே யாரு
வருக மாமா நேரு
எங்கே போகிறாரு
டில்லி போகிறாரு
என்ன சொன்னாரு
நல்லா படிக்கச் சொன்னாரு

RangaRakes
tamilnavarasam.com

40 மேலே பறக்குது ராக்கெட்டு
கீழே இறங்கு படிக்கட்டு
காய் கறி வாங்க மார்க்கட்டு
சினிமா பார்க்க டிக்கட்டு
தண்ணீர் மொள்ள பக்கெட்டு
கையில் இருப்பது மணிக்கட்டு

41
அடியே அடியே ராமக்கா
அரிசி காரன் வாரானடி
சின்ன கோட்டுலே புகுந்துக்கோ
சிறுக்குத்தாளம் போட்டுக்கோ
ரயில்மேலே ஏறிக்கோ
லட்டு மிட்டாய் வாங்கிக்கோ
ரொட்டுபிட்டு பாட்டுக்கோ

42
அத்திப் பழம் சிவக்குதடி தங்கமே பி
அம்மாகிட்ட சொல்லாதே பி தங்கமே பி
இனிக்கிறாம் புளிக்கிறாம் மாங்கொட்டை
நான் திறந்தது மேக் கோட்டை



43
கோழி கோழி வாவா
கொக்கரக்கோ என்றுவா
கோழி ஓடி வாவா
கொண்டைப் பூவைக் காட்டவா
காலை சேவல் எங்களைக்
கட்டில் விட்டு எழுப்புவாய்
வேலை செய்ய ஏவுவாய்
வெற்றி கொண்ட கோழியே

44
அடிக் களிக்கும் மயிலே வா
ஆட்டம் எனக்கு சொல்லித்தா
பாடிக் களிக்கும் குயிலே வா
பாட்டுப்பாடச் சொல்லித்தா
காவும் மானே அருகே வா
கனைக் குதிக்கச் சொல்லித்தா
சேவல் கோழி இங்கே வா
கூவி எழுந்திடச் சொல்லித்தா

RangaRakes
tamilnavarasam.com

45
தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு
அங்கே துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி
நாவால் நக்குது வெள்ளைப்பசு
பாலை நன்றாய்க் குடிக்குது கன்றுக்குட்டி

46
பட்டிக் காட்டு பொன்னம்மாள்
பட்டணத்துக்குப் போனாளாம்
எதைப்படிக்கத் தெரியாதாம்
ஏங்கிப் போய் நின்றாளாம்.

47
சின்னக்குட்டி ஆம்படையான் சீமானாம்
சிங்கப்பூருக்குப் போனானாம்
சைக்கிள் ஒன்றும் வாங்கினானாம்
தெருவில் நடந்து வந்தானாம்.

கான் தருவேன்

பசுவே பசுவே பால் தருவாய்
பச்சைப் புல்லை நான் தருவேன்
பாலைத் தந்தால் காய்ச்சிடுவேன்
பதமாய்க் கோவா செய்திடுவேன்
ந மாலை நேரம் நண்பருடன்
மகிழ்ந்தே அதனை உண்டிடுவேன்



48.
ஒண்ணும் ஒண்ணும் ரெண்டு
ஓடி ஆடும் வண்டு
ரெண்டும் ஒண்ணும் மூணு
ரெங்கு கம்பா சீனு
மூணும் ஒண்ணும் நாலு
முரட்டு நாயின் வாலு
நாலும் ஒண்ணும் அஞ்சு
நூல் நூற்கிற பஞ்சு
அஞ்சும் ஒண்ணும் ஆறு
ஆரணி எங்கும் ஊரு
ஆறும் ஒண்ணும் ஏழு
யாருக்கு வேணும் சூடு
ஏழும் ஒண்ணும் எட்டு
எங்கக்காளுக்கு பட்டு
எட்டும் ஒண்ணும் ஒன்பது
எங்க பாட்டி வெற்றிலை தின்பது
ஒன்பதும் ஒண்ணும் பத்து
உன் முதுகில் ஒரு குத்து.

RangaRakes
tamilnavarasam.com

49 சின்ன சின்ன மோட்டார்
பெரிய பெரிய மோட்டார்
நாலு சக்கர மோட்டார்
நான் ஏறும் மோட்டார்
பாடம் பாடும் மோட்டார்
பாடம் படிக்கிற மோட்டார்

50 பார் பார்
என்ன பார்
தேர் பார்
என்ன தேர்
பூந் தேர்
என்ன பூ
ரோஜாப் பூ
என்ன ரோஜா
காட்டு ரோஜா
என்ன காடு
மலை காடு
என்ன மலை
இமய மலை.



53 காலீ கோழி கூவும் முன்னே
கண்ணை விழித்துக் கொள்ளலாம்
எண்ணெய் தேய்த்து முழுகலாம்
பட்டணத்தில் வாங்கி வந்த
பட்டு ஆடை எடுக்கலாம்
கட்டிப்பார்த்து மகிழலாம்
பட்சணம் அப்பா விடம்
பட்டாஸ் கட்டு வாங்கலாம்
சாட்டு சுட்டுத் தீர்க்கலாம்
சுடுவாள் அம்மா பட்சணங்கள்
தட்டு நிறைய வாங்கலாம்
பிட்டு பிட்டு போடலாம்.

69 கண்ணு கண்ணு காத்தாடி
(2) களைச்சு வந்தா(ன்) கூத்தாடி
சோறில்லாம ஏங்கினா(ன்)
துணியைப் போட்டுத் தூங்கினா(ன்)

54

வாழை மரத்தைப் பாரடா
வளர்ந்து தொங்கும் தாரடா
தாரின் நுனியில் பூவடா
தூளியில் இருக்கும் பாவடா
பாவில் நிறைய இழையடா
பட்டுப் போன்ற இழையடா
இழைக்க வேண்டும் கஞ்சியே
இழையை நூற்கப் பஞ்சியே
பஞ்சி வென்றாய் பஞ்சியே
பாலர்க்கு வார்க்குங் கஞ்சியே.

55

கருங் குருவி வீட்டி லொரு
கல்யாணம் நடந்ததாம்
ஒருவரு ஓடிப் போயி
ஊருக்கெல்லாம் சொல்லிச்சாம்
இரண்டு மைனா இருந்துகொண்டு
இரத்தின கம்பளம் போட்டுச்சாம்
மூன்று கொக்கு கூடிக்கொண்டு
முக்காலியைப் போட்டதாம்.



ரு நாலு அன்னம் சேர்ந்துகொண்டு
மேளம் தாளம் கொட்டுச்சாம்
டமுக்கு டமுக்கு டக்கு டமுக்கு
பீப் பீப் பீப்பி பீப்பி பீ
ஐந்து மயில் கூடிக்கொண்டு
சந்தனத்தைப் பூசிச்சாம்.
ஆறு புறா சேர்ந்து கொண்டு
ஆலாத்தி எடுத்ததாம்
ஏழு குயில் இருந்து கொண்டு
அழகாகப் பாடுச்சாம்
எட்டு காக்கா கூடிக்கிட்டு
லட்டு எல்லாம் தின்னுச்சாம்
ஒன்பது கிளிகள் சேர்ந்துகிட்டு
வம்பு சண்டை போட்டுச்சாம்
பத்து பறவை கூடி லட்டை
கொத்தி கொத்தி தின்னுச்சாம்

RangaRakes

tamilnavarasam.com

56

அணிலே அணிலே ஓடிவா
அழகு அணிலே ஓடிவா
கொய்யா மரம் ஏறிவா
குண்டுப் பழம் கொண்டுவா
பாதிப் பழம் உன்னிடம்
பாதிப் பழம் என்னிடம்
கூடி கூடி இருவரும்
கொறித்துக் கொறித்துத் தின்னலாம்

57 அ. அம்மா! இங்கே வா வா
ஆ. ஆசை முத்தம் தா தா
இ. இலையில் சோறு போட்டு
ஈ. ஈயைத் தூர ஓட்டு
உ. உன்னைப் போன்ற நல்லார்
ஊ. ஊரில் யாவர் உள்ளார்
எ. என்னால் உனக்குத் தொல்லை
ஏ. ஏதும் இங்கே இல்லை
ஐ. ஐயம் இன்றிச் சொல்வேன்
ஒ. ஒற்றுமை என்றும் பலமாம்
ஓ. ஓதுதல் செய்வதே நலமாம்
ஔ. ஔவை சொன்ன மொழியாம்
ஃ. அஃதே எனக்கு வழியாம்



58

நிலவே நிலவே வாராயோ
நீந்தும் நிலவே வாராயோ (நில)
பொறுமை எண்ணம் உனக்கில்லை
பட்டம் பதவி உனக்கில்லை
சிறுமை கொண்ட மனிதரைப்போல்
சீறும் தன்மை உனக்கில்லை (நீ)
சிங்கார உந்தன் வடிவத்தை
சிறுவர் கண்டு நான்றுகிறார்
எங்கும் சுற்றி வருகின்றாய்
ஏனோ எம்மிடம் வரமாட்டாய் (நி)

காக்கையும் கமலாவும்.

குனுத்த மூக்கு காக்கா
கழுத்தை நீட்டு சோக்கா
இரைத்தைக் கொஞ்சம் கூப்பிடு
இந்தா சோறு சாப்பிடு
மணியடிக்கும் வந்திடு
மாங்காய் எனக்குத் தந்திடு

RangaRakes tamilnavarasam.com

௫௯

தம்பியே உலகில் நீ எங்கிலும்
தாழ்ந்து பணிந்திட வேண்டும் நீ
கண்ணே! பார்க்கும் பார்வையிலே
கருணை பொழிந்திட வேண்டும் நீ
காதே நல்ல வார்த்தைகளைக்
கருத்தாய் கேட்டிட வேண்டும் நீ
வாயே உள்ளம் குளிர்ந்திடவே
வார்த்தை கூறிட வேண்டும் நீ
மூக்கே இன்ப விருந்திலே
மூச்சாய் வெளியிட வேண்டும் நீ
ய் வயிறே ஏழை மனங் குளிர
வழங்கி உண்ணுதல் வேண்டும் நீ
கையே கிட்டப்படு வோர்க்கு
கைகொடுத்து தடவிட வேண்டும் நீ
காலே நல்ல செயல் செய்யக்
கடிதில் நடந்திட வேண்டும் நீ
உடலே உலகில் புகழ் என்றும்
உடைய நாட்டி வேண்டும் நீ.

அழ. வள்ளியப்பா



60. பனைமரமே பனைமரமே
ஏன் வளர்ந்தாய் பனைமரமே
நான் வளர்ந்த காரணத்தை
நன்றாகவே சொல்லுகிறேன்
2 பருக்கை நல்ல பானமா வேன்
பந்தலுக்கு நானா வேன்
அடுக்கடுக்காய்ப் பானைகளை
அடுக்கிவைக்க உறியாவேன்
3 சித்திரைக் கோடையிலே
சிறந்த நுங்கை நான் தருவேன்
எத்திசையில் உள்ளவர்க்கும்
இயற்றுகவி செய்திடுவேன்
பசித்து வந்த மக்களுக்குப்
4 பனம் பழமும் தந்திடுவேன்
பசிக்க நல்ல கிழங்கா வேன்
புது விசிறி உதவிடுவேன்
5 என்னைப் போல் யாவருமே
இயற்றுகவி செய்வீரேல்
பொன்னைப் போல் எல்லோரும்
போற்றிடவே வாழ்ந்திடலாம்

RangaRakes
tamilnavarasam.com

61

1 காட்டுப் பக்கம் தாத்தாவுக்குக்
காடு போலத் தாடியாம்
தாடி மேலே நிற்கும் போது
தாடி மண்ணில் புரளுமாம்

2 ஆந்தை இரண்டு கோழி மைனா
அண்டங் காக்கை குருவிகள்
பாந்தமாக தாடியுள்ளே
பதுங்கிக் கொண்டிருந்தன

3 உச்சி மீது நின்ற தாத்தா
உடல் குலுங்கத் தும்மினார்
அச்சு அச்சு என்ற போது
ளை) அவை அனைத்தும் பறந்தன

62. காய் காய் நெல்லிக் காய்
கனியானால் நெல்லிக் கனி
அதிமான் பெற்றிட்டான் ஔவைக்கு
கொடுத்திட்டான் ஔவையார் அதைத்
சாப்பிட்டார் அதிக காலம் வாழ்ந்திட்டார்
தமிழ்ப் பாட்டும் பாடினார் தமிழ்
நாட்டை வாழ்த்தினார்.



63

மாம் பழமாம் மாம்பழம்
மல்கோவா மாம்பழம்
சேலத்து மாம் பழம்
தித்திக்கும் மாம் பழம்
அழகான மாம் பழம்
அல்வாப் போல் மாம்பழம்
தங்க நிற மாம் பழம்
உங்களுக்கு வேண்டுமோ
இங்கே ஓடி வாருங்கள்
பங்கு போட்டுத் தின்னலாம்;

64.

குருவி பறந்து வந்ததாம்
குழந்தை அருகில் நின்றதாம்
பாவம்! அதற்குப் பசித்ததாம்
பாப்பா நெல்லைக் கொடுத்ததாம்
குருவி அந்த நெல்லையே
கொத்திக் கொத்தித் தின்றதாம்;
பசியும் நீங்கிப் பறந்ததே
பாப்பா இன்பம் கொண்டதே.

RangaRakes tamilnavarasam.com

65
ஒன்றும் ஒன்றும் இரண்டு
பூவில் இருப்பது வண்டு
இரண்டும் இரண்டும் நான்கு
இனிப்பாய் இருக்கும் தேங்காய்
மூன்றும் மூன்றும் ஆறு
வேகச் செய்தால் சோறு
நான்கும் நான்கும் எட்டு
நன்றாய்ப் பாடுவாள் பட்டு
ஐந்தும் ஐந்தும் பத்து
அன்பே நமது சொத்து.

66 பச்சை மாமலை போல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமரரேறே!
ஆயர்தம் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர யான் போய்
இந்திர லோகமாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே

தொண்டரடிப்பொடியாழ்வார்.



எண்கள் (பாட்டு)

67
1 ஒன்று யாருக்கும் தலை
2. இரண்டு முகத்தில் கண்
3. மூன்று முக்காலிக்குக் கால்
4. நான்கு நாற்காலிக்கு கால்
5. ஐந்து ஒரு கை விரல்
6. ஆறு ஈக்குக் கால்
7. ஏழு வாரத்தில் நாள்
8. எட்டு சிலந்திக்குக் கால்
9. ஒன்பது தானிய வகை
10 பத்து இருகை விரல்.

68. பச்சைப் பச்சைப் போட்டு
(1) பாப்பாத்திம்பா(ள்) கோட்டு
தன்னன் திம்பா(ன்) பனானா
பாட்டு பாடுனால், தனானா
சரிகமபதநி – சித்தாங்கனி

RangaRakes tamilnavarasam.com

1 தச்சன் மரத்தை அறுத்துவிட்டுத் தக்கப்
ஆப்பை செலுத்தி விட்டு
சாப்பாட்டிற்குச் சென்ற போது
தோப்பிலிருந்தக் குரங் கொன்று
அறுத்த மரத்தில் உட்கார்ந்து
(தே) அசைத்து ஆப்பை பிடுங்கின அந்த
அந்தப் பிளவியின் குரங்கின்வ
ஙிகப் பட்டு நன்றாய் நசுங்கியதே
அப்பால் மரணம் அடைந்ததுவே

2.

க ச ட த ப ற வல்லினம்
ங ஞ ண ந ம ன மெல்லினம்
ய ர ல வ ழ ள இடையினம்
யாரும் இங்கே ஓரினம்

3.

தோ தோ நாய்க் குட்டி
துள்ளி வா வா நாய்க்குட்டி
உன்னைத் தானே நாய்க் குட்டி
ஓடி வா வா நாய்க் குட்டி

RangaRakes
tamilnavarasam.com

4

அப்பா தந்தது வாய்ப்பாடு
அம்மா போட்டது சாப்பாடு
அண்ணன் ஓட்டுவது மோட்டாரு
அண்ணி வைப்பது சாம்பாரு
பாட்டன் அடித்தது பாம்பு
பாட்டி இடித்தது கம்பு
தம்பி செல்வது பள்ளி
தங்கை கேட்பது சல்லி

5.

குருவி குருவி பறந்துவா
கொஞ்சி பேச பறந்துவா
அருகம் புல்லை தூக்கி வா
அழகு கூடு கட்ட வா
சிறுவ ரோடு சேர்ந்து நீ
சிரித் திருக்கப் பறந்துவா
குருவி குருவி பறந்துவா
குதித்து குதித்து பறந்துவா



6.

மயில் போல் ஆடுவேன்
மான் போல் ஓடுவேன்
குயில் போல் பாடுவேன்
குருவி போல் தேடுவேன்
பூனை போல் பதுங்குவேன்
புலி போல் பாய்வேன்
சிங்கம் போல் வாழ்வேன்
சிறிதும் நான் வீழேன்.

7.

கண்ணீர் மொள்ளும் தாம்பு
தவளையை விழுங்கும் பாம்பு
காய் பூ இலைக்கண் காம்பு
காற்றில் அசையுது தேம்பு
வேண்டாம் எதிலும் வீம்பு
வீம்பால் விளையும் தீம்பு
ஒழுக்கம் உயர்வாய் ஓம்பு
உனக்கு எவர் செய்வார் தீம்பு

RangaRakes
tamilnavarasam.com

8.

குட்டை குட்டை கத்தரிக்காய்
குண்டு குண்டாய்ச் சுண்டைக்காய்
நெட்டை நெட்டை முருங்கைக்காய்
நீண்டு தொங்கும் புடலங்காய்
சட்டி பானை போலவே
கழுத்திருக்கும் பறங்கிக்காய்
பட்டைப் போட்ட வெண்டைக்காய்
பச்சை நிறப் பாகற்காய்
சொட்டையில்லா கீரைகள்
சொக்கும் நல்ல தக்காளி
வாட்ட சாட்ட வாழைக்காய்
வந்து பார் என் தோட்டத்தில்

9,

மாமா மாமா மரத்துச் சோலி
நீ வந்த வேளை கம்பஞ் சோறு
கத்தரிக்காய் சாம்பாறு
கரைத்து குடிங்கள் மாமா
கடனு வாங்கித் தாங்க
காசு கொடுங்க மாமா

10

அ என் பவன் அத்திப்பழம் என்றான்
ஆ என் பவன் ஆசைப் பட்டான்
இ என் பவன் இதோ என்றான்
ஈ என் பவன் ஈ. என்றான்
உ என் பவன் உறி என்றான்
ஊ என் பவன் ஊதி விட்டான்
எ என் பவன் எனக்கு என்றான்
ஏ என் பவன் ஏது என்றான்
ஐ என் பவன் ஐயா என்றான்
ஒ என் பவன் ஒன்று என்றான்
ஓ என் பவன் ஓடி விட்டான்
ஔ என் பவன் ஔவைக் கொண்டான்

11, டில்லிக்குப் போனேன்
நேருவைப் பார்த்தேன்
சலாம் வைத்தேன்
சாக்லட் தந்தார்
அதோ பார் மைனா
ஆல் பத்திரி கொய்னா
எங்கப்பா பேரு நயினா
நான் போறேன் சைனா

RangaRakes
tamilnavarasam.com

12, அடிக்கும் பந்து பார் பார்!
ஆடும் பம்பரம் பார் பார்!
பறக்கும் குருவி பார் பார்
பச்சை மாங்காய் பார் பார்
சிரிக்கும் பாப்பா பார் பார்
சின்ன ஆனை பார் பார்
தேசக் கொடியைப் பார் பார்
காந்தி தாத்தா பார் பார்

3 நெல்லுக்குள்ளே அரிசி இருக்கு சொ
நெருப்புக்குள்ளே சூடு ,, ல்லாதே
சொல்லுக்குள்ளே பொருள் ,, ,,
சோற்றுக்குள்ளே சத்து ,, ,,
பாட்டுக்குள்ளே இசை ,, ,,
பழத்துக்குள்ளே ருசி ,, ,,
காட்டுக்குள்ளே மரம் ,, ,,
கடலுக்குள்ளே உப்பு ,, ,,
புவிக்குள்ளே நீர் ,, ,,
பூவுக்குள்ளே தேன் ,, ,,
நாமிப்போது பேசியது எல்லாமே
நாலு பேர்கள் காதில் கேட்கச் சொல்லாதே



14.
அ ஆ அணில் ஆடு
ஆழ காய் இதனை நீ பாடு
இ ஈ இல் ஈட்டி
எழிலாய் நட நீ கைகிட்டி
உ ஊ உரல் ஊசி
உள்ளம் மகிழ நீ வாசி.
எ ஏ எலி ஏணி
என்றும் இறைக்கும் நீர்க் கேணி
ஒ ஓ ஒட்டகம் ஓர் ஓடம்
உண்மை உரைப்பது நாற்ப் பாடம்
ஐ ஔ ஐயர் ஔட தாமரம்
அன்பாய் தமிழ்மை படிப்போம் நாம்

15. தேவே உன்னைப் போற்றிடுவேன்
தினமும் என்னைக் காத்திடுவாய்
நாவில் உன்னை நான் பாட
நல்ல தமிழைத் தந்திடுவாய்

RangaRakes
tamilnavarasam.com

46,
வெள்ளி நிலா வா வா
விளையாட நீ வா வா
செல்லப் பாட்டுப்பாடு வோம்
நாம் ஓடி யாடு வோம்
ஒன்று இரண்டு மூன்று
ஓடி வா இன்று
செல்லப் பாட்டுப் பாடுவோம்
நாம் ஓடி யாடு வோம்
நான்கு ஐந்து ஆறு
நின்று நீ எண்ணிப்பாரு
ஏழு எட்டு ஒன்பது
ஏன் அங்கே நிற்பது
பத்து ஆறு ஆயிரம்
பறந்து வா சீக்கிரம்.

47,
தத்தங்கி தத்தங்கி தட்டும்பிள்ளை
தயிரும் சோறும் தின்னும் பிள்ளை (கு)
அப்பம் சுட்டு தின்னும்பிள்ளை
அவலு இடிச்சி தின்னும் பிள்ளை



18. 1+1=2 ஜப்பான் காரன் குண்டு
2+1=3 அய்யா வீட்டு தாண்டு
3+1=4 கருப்பு நாயின் வாலு
4+1=5 பாட்டி தலை பஞ்சு
5+1=6 ரோட்டில் இருக்கும் தாறு
6+1=7 அம்மா போடும் சடூ
7+1=8 பாட்டி சுட்ட புட்டு
8+1=9 பாட்டி வெற்றிலை தின்பது
9+1=10 முதுகில் ஒரு குத்து.

19. கூட்டல் கணக்குப் பாட்டு
ஒன்று ஒன்றும் இரண்டு
பூவில் இருப்பது வண்டு
இரண்டும் இரண்டும் நாலு
எலியின் பின்னே வாலு
மூன்றும் மூன்றும் ஆறு
வேலை செய்தால் சோறு
நான்கும் நான்கும் எட்டு
நன்றாய் இருக்கும் மட்டு
ஐந்தும் ஐந்தும் பத்து
அண்ணன் பெயர் முத்து

RangaRakes
tamilnavarasam.com

20 முத்தம் தா.

கண்ணே மணியே முத்தம் தா
கட்டிக் கரும்பே முத்தம் தா
வண்ணக் கிளியே முத்தம் தா
வாசக் கொழுந்தே முத்தம் தா
தேனே பாலே முத்தம் தா
✗ தெவிட்டாக் கனியே முத்தம் தா
மானே மயிலே முத்தம் தா
மடியில் வந்து முத்தம் தா.

1. கிழமைப் பாட்டு

ஞாயிற்றுக் கிழமை நகையைக் காணோம்
திங்கள் கிழமை திருடன் கிடைத்தான்
✓ செவ்வாய்க் கிழமை ஜெயிலுக்குப் போனான்
புதன் கிழமை புத்தி வந்தது
வியாழக் கிழமை விடுதலை யானான்
வெள்ளிக் கிழமை வீட்டுக்குப் போனான்
சனிக் கிழமை சாப்பிட்டு படுத்தான்
அப்புறம் அவன் கதை ஆருக்கு தெரியும்

22.

1 வாத்து நல்ல வாத்து தான்
வால் ஆட்டும் வாத்து தான்
2 அசக்கி நடக்கும் வாத்து தான்
அழகு வெள்ளை வாத்து தான்
3 துள்ள துள்ள வாத்து தான்
✗ க்வாக் க்வாக் வாத்து தான்
4 மொட்டை மூக்கு வாத்து தான்
முட்டை போடும் வாத்து தான்.
5 உனக்கு முட்டை வேணுமா.
உடனே வந்து வாங்கிக்கோ
6 தின்ன முட்டை வாங்கிக்கோ
தேர்வில் முட்டை வாங்காதே

23 பாட்டுக்குப் போட்டி
வேட்டைக்கு ஈட்டி
கட்டிக்க வேட்டி
✓ கதை சொல்லு பாட்டி

24.

காகம் காகம் என்று சுற்றி
காகம் ஒன்றும் பறந்ததாம்
தண்ணீர் எங்கும் கிட்டாமல்
தாவி தாவிப் பறந்ததாம்
கூரை வீட்டு கொல்லை புறம்
குடம் ஒன்று கண்டதாம்
கொள்ளை இன்பம் பொங்கவே
குதித்து அதைப் பார்த்ததாம்
நீர் அடியில் இருந்ததால்
காகமும் சோர்ந்தது
நீண்ட பெருமூச்சு விட்டு
சிந்தனையும் செய்ததாம்
சிந்தனையின் ஆற்றலால்
வந்தது ஒரு யோசனை
சின்ன சின்ன கற்களை
பொறுக்கி குடத்துள் போட்டது
வந்தது தண்ணீர் மேலே
காகம் தீர குடித்தது
வாய் விட்டு காகா வென்று
வட்டமிட்டுப் பறந்தது.

25.

தந்தம் தந்தம் தந்தம் தனதனனே
தந்திரக் குரங்கின் ஸமாசம் பார்
புத்தி கெட்ட பூனை இரண்டு
புதுமையான பலகாரம்
பற்றிக் கொண்டு குரங்கினிடம்
பங்கிட கொடுத்து பார் கொடுமை
துண்டு இரண்டு செய்து தான்
தூக்கி விட்டது தராசதனை
ஒன்றுக் கொன்று தாழ்ந்திடவே
ஒன்றில் கொஞ்சம் தின்றிடவே
அப்படியே பலகாரமெல்லாம்
அதுவே தின்றது அநியாயம்
ஆசையினாலே பாலர்களே
பாதகம் செய்ய அஞ்சியாதீர்கள்

RangaRakes
tamilnavarasam.com

15



1 எலியும் தவளையும் வெகு இஷ்டமாய் மனம்
2 கலந்து வாழும் கையும் கயிற்றில்
3 கட்டிக் கொண்டன
4 கட்டிக் கொண்ட பின்
5 அவை களித்து திரிகையில்
6 கிட்ட இருந்த குளத்தில் தவளை
7 பாய்ந்து குதித்திட
8 சிக்கி முக்கிட்டு எலி செத்து மிதந்தது
9 பக்கம் இருந்த பருந்து ஒன்று
10 பாய்ந்ததாம் எலியை
11 தூக்கிச் செல்கையில் தலை [?]
12 தொங்கும் தவளையும்
13 போக்கில்லாமல் பருந்தினாலே
14 புசிக்கப்பட்டது யாரும் இதனாலே
15 மிக எளிதில் உணரலாம்
16 சேர எண்ணத்தவர் பிறருக்கிடும்
17 செய்யும் தீங்கு தன்னையே



ஒரு நாள் பெரு மழை பெய்த போது.
குளிரால் வருந்திய குரங்கு ஒன்று
ஓங்கி வளர்ந்த மரத் தடியில்
தங்கியிருந்த ~~[?]~~ தருணத்திலே
மரத்தின் மீது கூடு கட்டி
மகிழ்வாய் வாழும் குருவி இரண்டு
குரங்காரே குரங்காரே
குடியிருக்க இடமில்லை ஐயா
மனிதனைப் போல உனக்கிரண்டு
கைகளிருந்தும் பயன் என்ன?
கைகளில்லாத நாங்கள் கூட
கருத்தாய் கூடுகள் கட்டுகிறோம்
என்று சொல்லி மூடு முன்னே
உடனே குரங்கு கோபம் கொண்டு
வாடா அற்பப் பயலே என்று
சொல்லிக் கொண்டே மரத்தில் ஏறி
கட்டிய கூட்டை பிரித்திட்டது
மூடருக்கு நல் யோசனைகள்
ஓ சொன்னாலும் அது கேளாது

RangaRakes
tamilnavarasam.com

28 காட்டில் ஒரு சிங்கம் தூங்கிடவே
காணும் மேல் எலி ஓடிடவே
விழித்துக் கொண்டதைச் சிங்கம் பிடித்திடவே
கீச் கீச் என்றெலி கத்திடவே.
தூக்கத்தை நீ யேன் கெடுத்தாய் என்று
துரிதமாய் சிங்கம் கேட்டதுவே
குற்றத்தைப் பொறுத்திடுவீர் ஐயாவே
கும்பிட்டேன் காலில் என்றதுவே
சிங்கமும் அதன்பின் யோசித்து
சிறுவனே மன்னித்தேன் என்று சொல்லி
தப்பாதேனும் பிழைத்தோம் என்றோடி
தங்கினது எலியும் தன் வளைக்குள்ளே
வேடன் ஒருநாள் வலை வீச வேகமாய்
அதில் சிங்கம் விழுந்துபட
சப்தம் செய்ததை எலி கேட்டு
சற்றென இடம் வந்து
விரைவில் வலையைக் கடித்தெறிந்து
வெளியே சிங்கத்தைப் போகவிட்டதே
உலகில் சிறியவர் இடத்திலுமே
உபகாரம் நன்றியில் கிடைக்கும் என்றே
உணர்ந்து கொண்டோம் நாமெல்லோரும்
உண்மையை இந்த கதையிலேலே

29 ஆமையும் முயலும் அழகாக
அவைமேல் பந்தயம் ஆரம்பிக்க
ஆமை மெதுவாய் அசைந்திடவே
முயலும் முன்னால் ஓடி ஒரு
வயலில் படுத்துத் தூங்கிவிட
வந்தது மெதுவாய் ஆமையுமே
முயலைப் பார்த்து மெதுவாக
முதலில் ஆமை போயிற்று
முயலும் தூங்கி விழித்தவுடன்
மெள்ள மெள்ள போயிற்று
முன்னே ஆமையைப் பார்த்தவுடன்
முயலும் வெட்கம் அடைந்ததுவே
கர்வம் கொண்டால் தோற்றிடுவோம்
சாந்தம் கொண்டால் வென்றிடுவோம்

30 கட்டிலின் மேல் நானே ராஜா
காசி அண்டி பார்ப்பேன்
கடிதம் பிடித்து எழுதிடவும்
கருத்தப் பேனா பிடிப்பேன்.

RangaRakes
tamilnavarasam.com

இரண்டாம் விரல் நானே ராஜா
எதுவும் சுட்டிக் காட்டி
எழுதவும் என் உதவி என்றி எதுவும் நடவாது
மூன்றாம் விரல் நானே ராஜா
முன் நிறுத்திப் பாரும்
மீத்தவனும் நானே நடு
நாயகனும் பேராம்.
✓ நான்காம் விரல் நானே ராஜா
நல முடனே பாரும்.
நவரத்தின மோதிரங்கள்
அணிபவனும் நானே
ஐந்தாம் விரல் நானே ராஜா
அதனை எண்ணிப் பாரும்
ஆதி பகவானைத் தொழுவதற்கு
முன் நிற்பவனும் நானே.



31 என்ன செய்யலாம்

செத்த மாட்டுத் தோலிலே
செய்யலாமே செருப்புகள்
செத்த ஆட்டு மயிரிலே
செய்யலாமே கம்பளி
செத்த எருமைக் கொம்பிலே
✓ செய்யலாமே சீப்புகள்
செத்த யானைத் தந்தத்தால்
செய்யலாமே பொம்மைகள்
செத்த பாம்புத் தோலிலும்
செய்யலாமே பைகளே
செத்த மனிதன் உடலிலே
செய்ய என்ன உள்ளதே
செருப்புக்கூடத் தைத்திட
தீண்டுவோரும் இல்லையே

வாத்தியார் வீட்டு கோழி
வாக்காலுக்குப் போச்சாம்
X கெட்டி மீனை கண்டதாம்
குதித்து குதித்துப் பார்த்தாம்

RangaRakes
tamilnavarasam.com

32.

(1) பட்டணத்துக்குப் போகலாம்
பட்டாடைகள் வாங்கலாம்
இடுப்பிலே கட்டலாம் — ஜில் ஜில் நடக்கலாம்

(2) மதுரைக்குப் போகலாம் — மல்லிகைப்
பூ வாங்கலாம் சடையிலே வைக்கலாம் —
ஜோர் ஜோர் நடக்கலாம்

3 தஞ்சாவூர் போகலாம் — தந்தச் சீப்பு
வாங்கலாம் தலையை நன்றாய் வாரலாம்
ஜாம் ஜாம் நடக்கலாம்.

4, மயிலாப்பூருக்குப் போகலாம்
மல்லிகைப்பூ வாங்கலாம்
மாலையாகக் கட்டலாம்
மகிழ்ந்து தலையில் சூடலாம்

5, திண்டுக்கல் போகலாம் — [illegible] செம்பு
வாங்கலாம் தண்ணீர் நன்றாய் குடிக்க-
லாம் — டக் டக் நடக்கலாம்

6 பெங்களூருக்குப் போகலாம் தங்க வளையல்
வாங்கலாம் கைகளிலே
போடலாம் குலுக்கிக் குலுக்கிக் காட்டலாம்.



33 நரியும் திராட்சையும்

பெரிய தோட்டம் ஒன்றிலே
சிறிய நரியும் சென்றது
நரிக்கு பசியும் வந்தது
நான்கு திசையும் சென்றது
உயர்ந்து வளர்ந்த கொடியிலே
உள்ள திராட்சை குலையிலே
நரியும் கண்டு மகிழ்ந்தது
நாக்கில் நீரும் சுரந்தது
பறிக்க எட்டிப் பார்த்தது
பயன் படாமல் போயிற்று
முயன்று முயன்று பார்த்தது
முயற்சி வீணாய் போயிற்று
வேறு வழியில்லையே வெறுத்து நரியும்
சொல்லுமே சீச்சீ பல்லுக்கு அடமே
தின்றால் இப்பழம் புளிக்குமே
என்று நரியும் நினைத்தது
ஏகினதே அவ்விடத்தை விட்டு.

# தன் பெயர் மறந்த ஈ

34

கொடு கொடு கன்றே
கன்றின் தாயே
கன்று மேய்க்கும் ஆயனே
ஆயன் கைக் கோலே
கோல் வளர்த்த கொடிமரமே
கொடிமரத்தின் மேல்இருக்கும் கொக்கே
கொக்கு நீராடும் குளமே
குளத்தில் இருக்கும் மீனே
மீன் பிடிக்கும் வலையா
வலையன் கைக் கலயமே
கலயம் செய்யும் குயவா
குயவனைகடிக்கும் மண்ணே
மண் மேல் இருக்கும் புல்லே
புல்லு உண்ணும் குதிரையே
என் பெயர் என்ன.
ஈ. ஈ. ஈ.

35

10 பத்து சிட்டுக்குருவி கோட்டைமேலே பார்
அதில் ஒன்று பறந்திட மீதி ஒன்பது தான்.
9 ஒன்பது சிட்டுக்குருவி கோட்டைமேலே பார்
அதில் ஒன்று பறந்திட மீதி எட்டு தான்
8 எட்டு சிட்டுக்குருவி கோட்டைமேலே பார்
அதில் ஒன்று பறந்திட மீதி ஏழு தான்
7 ஏழு சிட்டுக்குருவி கோட்டைமேலே பார்
அதில் ஒன்று பறந்திட மீதி ஆறு தான்
6 ஆறு சிட்டுக்குருவி கோட்டைமேலே பார்
அதில் ஒன்று பறந்திட மீதி ஐந்து தான்
5 ஐந்து சிட்டுக்குருவி கோட்டைமேலே பார்
அதில் ஒன்று பறந்திட மீதி நான்கு தான்
4 நான்கு சிட்டுக்குருவி கோட்டைமேலே பார்
அதில் ஒன்று பறந்திட மீதி மூன்று தான்
3 மூன்று சிட்டுக்குருவி கோட்டைமேலே பார்
அதில் ஒன்று பறந்திட மீதி இரண்டு தான்.
2 இரண்டு சிட்டுக்குருவி கோட்டைமேலே பார்
அதில் ஒன்று பறந்திட மீதி ஒன்று தான்
1 ஒன்று சிட்டுக்குருவி கோட்டைமேலே பார்
அதில் ஒன்று பறந்திட மீதி சைப்பர் தான்.

RangaRakes
tamilnavarasam.com

36
அம்மா பொன்னே தும்பை பூவே
ஆம்படையான் வந்தால் என்னசெய்வாய்
கட்டி வெல்லம் புட்டுவைப்பேன்
தூங்க பால் காய்ச்சிவைப்பேன்
பாலும் சோறும் போட்டுவைப்பேன்
உன்னை உண்ணசோறுவைப்பேன்
பட்டு பாயை விரித்திடுவேன்
பக்கத்தில் இருந்து பேசிடுவேன்.

37
பால்க்காய்ச்சினால் ஆடையாம்
மக்கள் உடுப்பது ஆடையாம்
பங்குனி பிறந்தால் கோடையாம்
நாட்டியம் ஆடுவது மேடையாம்
குறவன் முடைவது கூடையாம்
படைகள் முழக்குவது முரசு
மன்னன் ஆள்வது அரசு
விளையாத நிலமே தரிசு
மேலோர் பெறுவது பரிசு



38.
சூரியன் உதிப்பது காலை
நீ தூக்கி வைப்பது காலை
சூரியன் மறைவது மாலை
நீ சுவாமிக்கு அணிவது மாலை
எலிகள் தோண்டிய வளை
நீ எனை ஓடிய வளை
நம்ப வீட்டு ஆடு
நாமும் போட்டு ஆடு
பானை உடைந்தால் ஓடு
நீ பள்ளியில் சேர ஓடு

39
ரோட்டு மேலே காரு
காருக் குள்ளே யாரு
எங்க மாமா ஜோரு
எங்கே போறாரு
டில்லி போறாரு
என்ன சொன்னாரு
நல்லா படிக்கச் சொன்னாரு
சொன்னாரு

RangaRakes
tamilnavarasam.com

40

மேலே பறக்குது ராக்கெட்டு
கீழே இறங்க படிக்கட்டு
காய்கறி வாங்க மார்க்கெட்டு
சினிமா பார்க்க டிக்கட்டு
தண்ணீர் மொள்ள பக்கெட்டு
கையில் இருப்பது மணிக்கட்டு

41

அடியே அடியே ராமக்கா
அரிசி காரன் வாரான்டி
சின்ன ஊட்டுலே புகுந்துக்கோ
ஏழுத்தித்தாளம் போட்டுக்கோ
ரயில் மேலே ஏறிக்கோடா
பட்டு மிட்டாய் வாங்கிக்கோ
பட்டு பிட்டு போட்டுக்கோ

42

அத்திப் பழம் விக்கிதடி தங்க பேபி
அம்மாகிட்டே சொல்லாதேடி தங்க பேபி
இனிக்கிதாம் புளிக்கிதாம் மாம்பேட்டை
நான் பிறந்தது மதுக்கோட்டை



43

கோழி கோழி வாவா
கொக்கரக்கோ என்றுவா
கோழி ஓடி வா வா
கொண்டைப் பூவைக் காட்டவா
காலை கூவி எங்களைக்
கட்டில் விட்டு எழுப்புவாய்
வேலை செய்ய ஏவுவாய்
வெற்றி கொண்ட கோழியே

44

ஆடிக் களிக்கும் மயிலே வா
ஆட்டம் எனக்கு சொல்லித்தா
பாடிக் களிக்கும் குயிலே வா
பாட்டுப் பாடச் சொல்லித்தா
தாவும் மானே அருகே வா
தாவிக் குதிக்கச் சொல்லித்தா
கூவும் கோழி இங்கே வா
கூவி எழுந்திடச் சொல்லித்தா

RangaRakes
tamilnavarasam.com

45

தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு
அங்கே துள்ளிக்குதிக்குது கன்றுக்குட்டி
நாவால் நக்குது வெள்ளைப் பசு
பாலை நன்றாய்க் குடிக்குது கன்றுக்குட்டி

46

பட்டிக் காட்டு பொன்னம்மாள்
பட்டணத்துக்குப் போனாளாம்
எழுதப் படிக்கத் தெரியாதாம்
ஏங்கிப் போயின்றாளாம்.

47

சின்னக் குட்டி அம்பலையான் சீமானாம்
சிங்கப்பூருக்குப் போனாராம்
செருப்பும் குடையும் வாங்கினாராம்
தெருவில் நடந்து வந்தாராம்.

48

ஒண்ணும் ஒண்ணும் ரெண்டு
ஓடி ஆடும் கிண்று
ரெண்டு ஒண்ணும் மூணு
ரெங்கு தம்பி சீனு
மூணும் ஒண்ணும் நாலு
முரட்டு நாயின் வாலு
நாலும் ஒண்ணும் அஞ்சு
நூல் நூற்கிற பஞ்சு
அஞ்சும் ஒண்ணும் ஆறு
அதவணி எங்க ஊரு
ஆறும் ஒண்ணும் ஏழு
பாருக்கு வேணும் கூழு
ஏழு ஒண்ணும் எட்டு
எங்கக்கா சேலை பட்டு
எட்டு ஒண்ணும் ஒன்பது
எங்க பாட்டி வெற்றிலை தின்பது
ஒன்பது ஒண்ணும் பத்து
உன் முதுகில் ஒரு குத்து.

RangaRakes
tamilnavarasam.com

சின்ன சின்ன மோட்டார்
பெரிய பெரிய மோட்டார்
நாலு சக்கர மோட்டார்
நான் ஏறும் மோட்டார்
பாம் பாம் மோட்டார்
படம் படிக்கிற மோட்டார்

பார், பார்
என்ன, பார்
தேர், பார்
என்ன. தேர்
பூந், தேர்
என்ன, பூ
னோசாய், பூ
என்ன னோசா
காட்டு னோசா
என்ன காடு
மலைக் காடு
என்ன மலை
இடை மலை.

நாலு அன்னம் சேர்ந்து கொண்டு
மேளதாளம் கொட்டுச்சாம்
டுமுக்கு டுமுக்கு டுமுக்கு டுமுக்கு
பிப் பிப் பிப்பி பிப்பி பீ.
ஐந்து மயில் கூடிக்கொண்டு
சந்தனத்தைப் பூசுச்சாம்
ஆறு புறா சேர்ந்து கொண்டு
ஆலாத்தி எடுத்தாம்
ஏழு கிளியில் இருந்து கொண்டு
அழகாகப் பாடுச்சாம்
எட்டு காக்கா கூடிக்கிட்டு
வட்டு எல்லாம் தின்னுச்சாம்
ஒன்பது கழுகு சேர்ந்துகிட்டு
வம்பு சண்டை போட்டுச்சாம்
பத்து புறா கூடி வட்டை
கொத்தி கொத்தி தின்னுச்சாம்

— x — x

RangaRakes
tamilnavarasam.com

56.

அணிலே அணிலே ஓடி வா
அழகு அணிலே ஓடி வா
கொய்யா மரம் ஏறி வா
குண்டுப் பழம் கொண்டு வா
பாதிப் பழம் உன்னிடம்
பாதிப் பழம் என்னிடம்
கூடி கூடி இருவரும்
கொறித்து கொறித்து தின்னலாம்

57.

சின்ன சின்ன மோட்டார்
பெரிய பெரிய மோட்டார்
நாலு சக்கர மோட்டார்

58

நிலவே நிலவே வாராயோ
நீந்தும் நிலவே வாராயோ (நிலவே)
பெருமை எண்ணம் உனக்கில்லை
பட்டம் பதவி உனக்கில்லை
சிறுமை கொண்ட மனிதரைப்போல்
சீறும் தன்மை உனக்கில்லை (நி)
சிங்கார உந்தன்வடி வத்தை
சிறுவர் கண்டு துள்ளுகிறார்
எங்கும் சுற்றி வருகின்றாய்
ஏனோ எம்மிடம் வரமாட்டாய் (நி)

RangaRakes tamilnavarasam.com

59.

கல்வியே உலகில் நீதிக்குத்
தாழ்ந்து பணிந்திட வேண்டும் நீ
கண்ணே! பார்க்கும் பார்வையிலே
கருணை பொழிந்திட வேண்டும் நீ
காதே நல்ல வார்த்தைகளைக்
கருத்தாய் கேட்டிட வேண்டும் நீ
வாயே உள்ளம் குளிர்ந்திடவே
வார்த்தை கூறிட வேண்டும் நீ
மூக்கே இன்ப வெளிதனிலேயே
மூச்சாய் வெளியிட வேண்டும் நீ
வயிறே ஏழை மனங்குளிர
வழங்கி ~~கி~~ உண்ணுதல் வேண்டும் நீ
கையே! கட்டப்படுவோர்க்கு
கைகொடுத்துதவிட வேண்டும் நீ.
காலே நல்ல செயல் செய்யக்
கடிதில் நடந்திட வேண்டும் நீ
உடலே! உலகில் புகழ் என்றும்
உடலே நாட்டிட வேண்டும் நீ

அழ. வள்ளியப்பா.

60 60

1. பனைமரமே பனைமரமே!
ஏன் வளர்ந்தாய் பனைமரமே.
நான் வளர்ந்த காரணத்தை
நண்பர்களே சொல்லுகிறேன்

கே. 2. படுக்க நல்ல பாயாவேன்
பந்தலுக்கு நாராவேன்
✓ அடுக்கடுக்காய்ப் பானைகளை
அடுக்கிவைக்க உறியாவேன்

3. சித்திரைக் கோடையிலே
சிறந்த நுங்கை நான் தருவேன்
எத்திசையும் உள்ளவர்க்கும்
(ந) இயலுகவி செய்திடுவேன்

(4, 4, பசித்து வந்த மக்களுக்குப்
பனம் பழமும் தந்திடுவேன்
புசிக்கநல்ல கிழங்காவேன்
புது விசிறி உதவுவேன்

5, என்னைப் போல் யாவருமே
இயலுகவி, செய்வீரேல்
பொன்னைப் போல் எல்லாரும்
போற்றிடவே வாழ்ந்திடலாம்.

RangaRakes
tamilnavarasam.com

(தாத்தாவின் தடி.)

61.

1 காட்டுப் பக்கம் தாத்தா வக்கிக்
காடு போலத் தாடியாம்
மாடு மேலே நிற்கும் போது
தாடி மண்ணில் புரளுமாம்.

2 ஆந்தை இரண்டு கோழி மைனா
அண்டங் காக்கை குருவிகள்
பாந்த மாக தாடி புள்ளே
பதுங்கிக் கொண்டு இருந்தன

3 உச்சி மீசு நின்ற தாத்தா
உடல் குலுங்கத் தும்மினார்
அச்சு அச்சு என்ற போது
அவை அனைத்தும் பறந்தன

62

63.

மாம் பழமாம் மாம்பழம்
மல்கோவா மாம்பழம்
சேலத்து மாம்பழம்
தித்திக்கும் மாம்பழம்
அழகான மாம்பழம்
~~அழகு~~ அல்வாப் போல் மாம்பழம்
தங்க நிற மாம்பழம்
உங்களுக்கு வேண்டுமோ
இங்கே ஓடி வாருங்கள்
பங்கு போட்டுத் தின்னலாம்

RangaRakes
tamilnavarasam.com

## எண்கள் பாட்டு

1. ஒன்று, யாருக்கும் தலை ஒன்று.
2. இரண்டு, முகத்தில் கண்கள் இரண்டு
3. மூன்று, முக்காலிக்குக் கால் மூன்று
4. நான்கு, நாற்காலிக்குக் கால் நான்கு
5. ஐந்து, ஒரு கை விரல் ஐந்து.
6. ஆறு, ஈ.க்குக் கால் ஆறு.
7. ஏழு, வாரத்தில் நாள் ஏழு.
8. எட்டு, சிலந்திக்குக் கால் எட்டு
9. ஒன்பது, தானிய வகை ஒன்பது
10. பத்து, இரு கை விரல் பத்து.

ஒன்றும் ஒன்றும்

ஒன்றும் ஒன்றும் இரண்டு;
பூவில் இருப்பது வண்டு,
இரண்டும் இரண்டும் நான்கு;
இனிப்பாய் இருக்கும் தேங்காய்
மூன்றும் மூன்றும் ஆறு
வேலை செய்தால் சோறு
நான்கும் நான்கும் எட்டு
நன்றாய்ப் பாடுவாள் பட்டு
ஐந்தும் ஐந்தும் பத்து.
அன்பே நமது சொத்து.



## குருவிப்பாட்டு.

குருவி பறந்து வந்ததாம்;
குழந்தை அருகில் நின்றதாம்;
பாவம்! அதற்குப் பசிக்குதாம்;
பாப்பா நெல்லைக் கொடுத்ததாம்.
குருவி அந்த நெல்லையே
கொத்திக் கொத்தித் தின்றதாம்;
பசியும் நீங்கிப் பறந்ததே!
பாப்பா இன்பம் கொண்டதே!

RangaRakes tamilnavarasam.com

(3) கிளியே கிளியே இங்கே வா
இன்னும் நிறையப் பால் தருவேன்
களித்துப் பாலைக் குடித்திடுவாய்
கதைகள் எனக்குச் சொல்லிடுவாய்.
காட்டில் மேயும் மந்திக் கதை
கனிவாய் பேசக் கற்றக் கதை
நாட்டில் வந்து திரிந்த கதை
நன்றாய் எனக்கே உரைத்திடுவாய்.
வானில் உயர நீ பறக்கும்
வகையை எனக்குக் காட்டிடுவாய்
நானும் அதனைக் கேட்டிடுவேன்
நன்றாய் வானில் பறந்திடுவேன்.

(4) சின்னப் பூனை என்னைப் பார்த்து
சிரித்துப் பேசுதம்மா — தன்
முன்னே உள்ள மீசையைக் காட்டி
வருவாய் என்குதம்மா.
அழைப்பை ஏற்று அருகில் சென்றேன்
நக்கிப் பார்க்குதம்மா — பின்
வாரும்மா என் மேல் உடலைத் தேய்த்து
உற்றுப் பார்க்குதம்மா.

கண்ணைக் காட்டி என்னிடத்தில்
இரையைக் கேட்குதம்மா — பசிக்கு
வெண்ணெய் பாலும் மோரும்
சோறும் வேண்டும் என்குதம்மா.
இரவும் எலியை விரட்டிப் பிடிக்க
முயற்சி செய்யுதம்மா — நம்
உடலும் அதனால் தூய்மையாக
விளங்கும் இனிமேல் அழகாக.
நல்ல பூனை சிறந்த தோழு
நாமும் போற்றிட வேண்டும் — என்றும்
இன்னும் இல்லாத சிறந்த பூனை
உற்ற துணையாகும்.

(5) மழையே மழையே வா வா
மனங்குளிர ஓடி வா
வானத்திலிருந்து ஓடி வா
வாடிய செடி மேல் ஏறி வா
மலையின் மேலே ஏறி வா
மதிலால் சோலைமேல் ஓடி வா
ஆறும் குளமும் உன்னாலே

RangaRakes
tamilnavarasam.com

காயமும் மருந்தும் உன்னாலே
உலகில் உறவும் உன்னாலே
துன்பமும் விலகும் உன்னாலே
உழைப்பும் செழிப்பும் உன்னாலே
மனிதர் உன்னை மகிழ்வதும் உன்னாலே
வறுமையும் அழிவும் உன்னாலே
காலடி மரத்தை வாழ்வது உன்னாலே
மனிதர் வாழ்வதும் உன்னாலே
மனமாற்றம் உன்னால் உன்னாலே.

(8) தெங்கு உயர்ந்த மரமாகும்
உச்சியில் ஓலை இருக்குமாம்
பாங்காய் அதனை கொய்திடுவார்
பக்குவமாய் வகிர்ந்திடுவார்
அழகாய் வரிசி கட்டிடுவார்
அலங்காரங்கள் செய்திடுவார்
ஒழுங்காய் கடையிலே வைத்திடுவார்
ஒவ்வொன்றாக விற்றிடுவார்.
சித்திரை வெயில் காலத்தில்
வெயிலை விரட்டும் தேக்கத்தில்

(9) அன்னம் போல நடை போடு
ஆடி ஆடி விளையாடு
இன்றும் என்ன கண்மணியே
ஈடில்லாத பொன்மணியே
உன்னைப் போல நல்லவரார்
உலகில் உன் போல் வல்லவரார்
என்னை விட்டுப் பிரியாதே
வலக் கைத்து திரியாதே
ஐந்து வயதும் ஆகிவிட்டதா?
ஐயா உன் கை திறமையோ
கற்றுக் கொண்டு மென்மையடா
அவள் உன்றன் காலடியடா
~~இவளை~~ இவளை உன்றன் பாட்டியடா
அழகாய் அ ஆ கற்றிடடா?
நாட்டம் கற்று உயர்ந்திடவே
பள்ளிக்கழகாய் சென்றிடடா.

(10) நான் தோசையும் பழமும் சாப்பிட்டேன்
தோலை சாலையால் எறிந்துவிட்டு
வீட்டுக்குள்ளே சென்றேன்.

RangaRakes
tamilnavarasam.com

சிட்டே சிட்டே ஓடிவா
சீக்கிரமாய் பறந்து வா
எட்டி எட்டி நிற்பதேன்
என்னைக் கண்டால் அச்சமா?
கீச்சு கீச்சு என்றுநீ,
கிட்ட கிட்ட ஓடிவா,
கொத்தும் கொத்தும் அலகாலே
நிறைய நெல்லை தருவேனே
கொறித்துக் கொறித்துத் தின்னலாம்
குதித்துக் குதித்து ஓடிவா.

RangaRakes
tamilnavarasam.com